Bom:- 28/11/2017

செ.மு.செ-608/2017

# செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 14.11.2017 அன்று தொகுதி–IVல் அடங்கிய பதவிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் பூர்த்தி செய்யும் நோக்கில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மொத்த பணியிங்கள் 9351 விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி 13.12.2017. ஆகும். இப்பணியிடங்களுக்கான கல்வித்தகுதி பள்ளி இறுதி வகுப்பாகும் (SSLC). பணியிட விவரங்கள் இடஒதுக்கீடு, வயது வரம்பு சலுகைகள், ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்திருக்கான சலுகைகள் யாவும் www.tnpsc.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் அறிந்து உடன் விண்ணப்பித்து தேர்வு எழுதி வெற்றிப்பெற்று வேலைவாய்ப்பினை பெறலாம். இவ்வாறு விண்ணப்பித்தவர்கள் ஏற்கனவே, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் காஞ்சிபுரத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் நடத்தப்பட்டு வரும் இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு தங்களை தயார் செய்து கொண்டு தேர்வில் வெற்றி பெறலாம். வகுப்புகள் தினமும் (அலுவலக நாட்களில்) காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரையிலும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வரப்படுகின்றன. மேலும், தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தினை பயன்படுத்தியும் தேர்வுக்கு தயார் செய்து கொண்டு வெற்றி பெறலாம். பயிற்சி வகுப்புக்கு வர விரும்பும் விண்ணப்பதாரர்கள் துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களை வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டை நகல் மற்றும் ஆதார் கார்டு நகல் ஆகியவற்றுடன் நேரில் அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்
காஞ்சிபுரம் மாவட்டம்

2/2